

# 2026-ல் ஜிடிபி கணக்கீட்டில் மாற்றம்




முனைவர் டி.கே.ஜயராமன்
ஆசிய வளர்ச்சி வங்கியின்
முன்னாள் பொருளாதார நிபுணர்
tkjayaraman@yahoo.com


ஒரு நாட்டின் பொருளாதார நலனைப் புரிந்து கொள்ளும் மொழி பொருளாதார தரவு. மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி மற்றும் பணவீக்கம் போன்ற எண்கள் வெறும் புள்ளி விவரங்கள் அல்ல; அவை அரசின் கொள்கைகள், வணிகத் தீர்மானங்கள், மேலும் இளம் தொழில் முனைவோரின் தொழில் தேர்வுகளையும் வடிவமைக்கின்றன.

இந்தியாவின் ஜிடிபி மற்றும், நுகர்வோர் விலைக் குறியீடு (Consumer Price Index) தரவின் தரம் குறித்து சமீபத்தில் விவாதங்கள் எழுந்துள்ளன. சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எப்) கடந்த நவம்பர் 27-ல் வெளியிட்ட ஆண்டறிக்கையில் செயல்முறை பலவீனங்கள் மற்றும் தரவு இடைவெளிகளைக் குறிப்பிட்டு, இந்தியாவின் தேசிய கணக்குகளை (ஜிடிபி உட்பட) 'C' என மதிப்பிட்டுள்ளது. இது அதன் தரப்படுத்தலில் இரண்டாவது குறைந்த நிலை. முதல் குறைந்த நிலை B ஆகும்.

ஐஎம்எப் அறிக்கை பற்றி கடந்த டிசம்பர் 3-ம் தேதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. ஐஎம்எப் உட்பட அனைத்து சர்வதேச அமைப்புகளும் தரவை ஏற்றுக்கொண்டதால், தரவுகளின் தரம் குறித்த கவலைகளை நிதியமைச்சர் நிராகரித்தார். ஐஎம்எப் தரவை கேள்வி கேட்கவில்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

### ஐஎம்எப் தரப்படுத்தும் முறை

ஐஎம்எப் தனது தரவு கட்டமைப்பு மதிப்பீடு (Data Quality Assessment Framework) மூலம், உலக நாடுகளின் புள்ளிவிவரங்களை, நேர்மை (Integrity), முறைமையியல் வலிமை (Methodological Soundness), துல்லியம் & நம்பகத்தன்மை (Accuracy & Reliability), சேவைத் திறன் (Serviceability), அணுகல் (Accessibility) ஆகிய 5 பரிமாணங்களில் மதிப்பிடுகிறது. இதன் அடிப்படையில், A மிக உயர்ந்த தரம், B நம்பகமானது, C பலவீனமானது, D மிகக் குறைந்த தரம் 4 ஆக பிரிக்கிறது.

பழைய அடிப்படை ஆண்டை (Base Year) 2010-11 பின்பற்றுவதாகவும், பதிவு செய்யப்படாத நிறுவனங்கள், மற்றும் GST/UPI தரவுகளை பொருளாதார தரவுகளில் முழுமையாக இணைக்கவில்லை என்றும் கூறி, இந்தியாவுக்கு C மதிப்பீடு வழங்கி உள்ளது.

ஜிடிபி மற்றும் நுகர்வோர் விலைக் குறியீடு தரவு ஏன் முக்கியம்?

- **ஜிடிபி:** நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பை அளவிடுகிறது. இது பொருளாதார வளர்ச்சியின் தலைப்பு குறியீடு.
- நுகர்வோர் விலைக் குறியீடு (சிபிஐ): அன்றாட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பதிவு செய்கிறது. இது பணவீக்கத்தின் முக்கியமான அளவுகோல், நாணயக் கொள்கை, தொழிலாளர் ஊதியம் மற்றும் ஊதிய திருத்தம் பேச்சுவார்த்தைகளை வழிநடத்துகிறது.

### ஐஎம்எப் எழுப்பிய கவலைகள்

> வரும் 2026-ம் ஆண்டு பிப்ரவரி 27-ம் தேதி புதிய அடிப்படை ஆண்டின் (2022-23) அடிப்படையில் ஜிடிபி தரவு வெளியிடப்படும்.

1. பழைய அடிப்படை ஆண்டு: ஜிடிபி-க்கு இந்தியா இன்னும் 2011–12-ஐ அடிப்படையாகப் பயன்படுத்துகிறது. வேகமாக மாறும் பொருளாதாரத்தில், இது டிஜிட்டல் கட்டணங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் புதிய சேவைத் துறைகளின் வளர்ச்சியைப் பதிவு செய்யவில்லை.
2. பெயரளவிலான (Nominal) ஜிடிபி: உண்மையான ஜிடிபி ஆக மாற்ற துல்லியமான விலைக் குறியீடுகள் தேவை. பலவீனமான விலைக் குறியீடுகள் வளர்ச்சி விகிதங்களை மாறுபடுத்தக்கூடும்.
3. நுகர்வோர் கூடை சமநிலையின்மை: உணவு மற்றும் பானங்கள் இந்தியாவின் நுகர்வோர் கூடையில் 54% ஆக உள்ளது. இதனால் பணவீக்கம் அதிகமாக மாறுபடுகிறது.
4. வெளிப்படைத்தன்மை குறைபாடு: ஜிடிபி மற்றும் சிபிஐ திருத்தங்கள் சில நேரங்களில் தெளிவாக விளக்கப்படுவதில்லை. இதனால் பகுப்பாய்வாளர்கள் குழப்பம் அடைகிறார்கள்.

இவை உண்மையான சவால்கள், ஆனால் இந்தியாவுக்கே தனித்துவமானவை அல்ல. ஒவ்வொரு நாடும் இதை எதிர்கொள்கிறது.

### 2026-ல் சீர்திருத்தங்கள்

இதனிடையே, பொருளாதார தரவில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- அடுத்த 2026-ம் ஆண்டு முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மற்றும் தொழில் துறை உற்பத்தி (ஐஐபி) குறியீட்டுக்கு 2022-23-ம் நிதியாண்டு அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்தப்படும்
- பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்கள் சிறப்பாகப் பதிவு செய்யப்படும்.
- **புதிய தரவுகள் இணைப்பு:** ஜிஎஸ்டி தாக்கல், யுபிஐ பரிவர்த்தனைகள் மற்றும் நிறுவன பதிவுகள் பயன்படுத்தப்படும்.
- **புதுப்பிக்கப்பட்ட நுகர்வோர் விலைக் குறியீடு அடிப்படையிலான கூடை:** காலண்டர் ஆண்டு 2024-ஐ தனது அடிப்படை ஆண்டாக மாற்றி குடும்ப நுகர்வு செலவுக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நுகர்வோர் விலைக் குறியீடு (சிபிஐ) நிர்ணயம் செய்யப்படும். உணவுப் பொருட்களின் முக்கியத்துவம் குறைக்கப்படும்.
- **மேம்பட்ட வெளிப்படைத்தன்மை:** திருத்தங்கள் செய்யப்பட்டபோது தெளிவான ஆவணங்கள் மற்றும் ஒப்பீட்டு அட்டவணைகள் வெளியிடப்படும்.
- இந்த நடவடிக்கைகள் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இணங்குகின்றன.

### பிற நாடுகளிலிருந்து பாடங்கள்

- அமெரிக்காவின் பொருளாதார பகுப்பாய்வு பணியகம் (Bureau of Economic Analysis) ஆண்டுதோறும் ஜிடிபி-ஐ திருத்துகிறது, வரி பதிவுகள் மற்றும் நிறுவன தாக்கல்களைப் பயன்படுத்துகிறது,
- ஐரோப்பிய ஒன்றியத்தின் யூரோசாட் (EUROSTAT) அலுவலகம் உறுப்பு நாடுகளுக்கு இடையே பணவீக்கக் குறியீடுகளை சம நிலைக்கு கொண்டு வருகிறது
- தென்னாப்பிரிக்கா மற்றும் கனடா: சிபிஐ கூடை புதுப்பிப்புகள் உணவின் எடையைக் குறைத்து, பணவீக்க அளவீட்டை நிலைப்படுத்துகின்றன.

வரும் 2026-ம் ஆண்டு பிப்ரவரி 27-ம் தேதி புதிய அடிப்படை ஆண்டின் (2022-23) அடிப்படையில் ஜிடிபி தரவு வெளியிடப்படும். தற்போதைய தரவை அடிப்படையாகக் கொண்ட முதல் முன்கூட்டிய (advance) மதிப்பீடு ஜனவரி 7 அன்று வெளியிடப்படும்.

பணவீக்கத்தைப் பொறுத்தவரை, ரிசர்வ் வங்கி ஏற்கெனவே 4% இலக்கை மறுபரிசீலனை செய்வது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கருத்துகளை பெற்றுள்ளது. இது மதிப்பாய்வில் உள்ளது.